இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 11-10-2024

# காஷ்மீரத்து வெற்றி

‘காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை’ என்பார்கள். கன்னியாகுமரியில் ‘இந்தியா’ கூட்டணி முன்பே வென்று விட்டது. இப்போது காஷ்மீரத்திலும் வெற்றி பெற்றுவிட்டது!

நாடாளுமன்றத் தேர்தலோடு சேர்த்து நடத்தினால் ஜம்மு - காஷ்மீரில் இந்தியா கூட்டணி வென்று விடும் என்று நினைத்து தள்ளிப் போட்டார்கள். தனியாக நடத்தினார்கள். சேர்த்து நடத்தினாலும், தனியாக நடத்தினாலும் பா.ஜ.க.வை தோற்கடிப்போம் என்று காட்டி விட்டார்கள் காஷ்மீரத்து மக்கள். மொத்தமுள்ள 90 இடங்களில் இந்தியா கூட்டணி 49 இடங்களைக் கைப்பற்றியது. தேசிய மாநாட்டுக் கட்சி ஆட்சி அமைக்கிறது. காஷ்மீரில் வென்று, இசுலாமியர் மண்ணைக் கைப்பற்றி விட்டோம் என்று காட்ட நினைத்த பா.ஜ.க. மனதில் மண் விழுந்துவிட்டது.

**ஜம்மு - காஷ்மீர் என்ற மாநிலத்தையும் மக்களையும் சிதைக்க சபதம் எடுத்து ஆட்சிக்கு வந்த கட்சிதான் பா.ஜ.க. ஒரே நாளில் காஷ்மீர் மக்களின் தனி உரிமைகள் பறிக்கப்பட்டன. அங்கிருந்த அரசியல் தலைவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்கள். ஜம்மு - காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் சட்டப்பிரிவு 370, கடந்த 2019-ம் ஆண்டு ஆகஸ்ட் 5-ம் தேதி நாடாளுமன்றத்தின் மூலம் ரத்து செய்யப்பட்டது. இரண்டு யூனியன் பிரதேசங்களாக அதனைப் பிரித்தார்கள்.**

370 ஆவது பிரிவை நீக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உண்டு என்றும், எந்த மாநிலமாக இருந்தாலும் அதனைப் பிரித்து யூனியன் பிரதேசமாக மாற்றும் அதிகாரம் மத்திய அரசுக்கு உண்டு என்றும் டெக்னிக்கல் காரணங்களைச் சொல்லி உச்சநீதிமன்றமும் இதனை ஏற்றுக் கொண்டது. இதனை தங்களுக்குச் சாதகமான தீர்ப்பு என்று பா.ஜ.க. மனநிறைவை அடைந்தது. ஆனால் அதே தீர்ப்பில் முக்கியமான உத்தரவும் இருந்தது.

காஷ்மீர் மாநிலத்துக்கு 2024 செப்டம்பர் மாதத்துக்குள் தேர்தல் நடத்தியாக வேண்டும் என்று உச்சநீதிமன்றம் சொல்லியது. அதைக்கூட ஒழுங்காகச் செய்யாமல் அக்டோபரில் தான் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஐந்து நீதிபதிகளில் ஒருவரான நீதியரசர் கௌல், “1980 ஆம் ஆண்டு முதல் காஷ்மீரத்தில் நடந்து வரும் மனித உரிமை மீறல்களை விசாரிக்க பாரபட்சமற்ற உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு அமைக்க வேண்டும்” என்று தீர்ப்பளித்தார். அது தொடர்பாக இதுவரை எந்த நடவடிக்கையாவது எடுக்கப்பட்டுள்ளதா? இல்லை.

**இது எதையும் செய்யாமல் - தேர்தலையும் நடத்தாமல் தள்ளிக் கொண்டே போனார்கள். உச்சநீதிமன்றத்தின் கண்டனத்துக்கு உள்ளாவோம் என பயந்து தேர்தலை இப்போதும் முழு மனமில்லாமல் நடத்தினார்கள். மக்கள் தங்களுக்குச் சாதகமாக இல்லை என்பதை உணர்ந்தார் மோடி. ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தைச் சிதைத்து யூனியன் பிரதேசம் ஆக்கிய பிரதமர் நரேந்திரமோடியே, “மீண்டும் மாநில அந்தஸ்து வழங்குவோம்” என்று இறங்கி வந்ததையும் பார்த்தோம்.**

இதை மட்டுமா சொன்னார் பிரதமர்? பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் குடும்பத் தலைவிகளுக்கு ஆண்டுக்கு 18 ஆயிரம் கொடுக்கப்படும் என்றும் காஷ்மீர் மக்களுக்கு வாக்குறுதி அளித்தார் பிரதமர். ‘சில ஆயிரம் கொடுப்பதால் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மாற்றிவிட முடியாது’ என்றாரே இந்த நூற்றாண்டின் பொருளாதார மேதை நிர்மலா சீதாராமன். ஆனால் மோடி சொல்கிறார், 18 ஆயிரம் தருகிறேன் என்று. எதற்காக?

**விவசாயிகளுக்கு 10 ஆயிரம் தருவேன் என்றார் பிரதமர் மோடி. இலவச மருத்துவக் காப்பீட்டை 5 லட்சத்திலிருந்து 7 லட்சம் ஆக்குவேன், ஜம்மு - காஷ்மீரின் விரைவான வளர்ச்சியைப் பற்றியே யோசித்து வருகிறேன்... என்று வாக்குறுதிகளை அள்ளிவிட்டாரே? என்ன ஆனது? இது எதையும் மக்கள் நம்பத் தயாராக இல்லை. பா.ஜ.க.வை தோற்கடித்துவிட்டார்கள். இந்தியா கூட்டணி வெற்றி பெற்றுவிட்டது.**

இப்படித்தான் முடிவுகள் வரும் என்று முன்பே சிக்னல் காட்டினார்கள் மக்கள். கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் லடாக் - கார்கில் தன்னாட்சி மலை மேம்பாட்டு கவுன்சிலுக்கு நடைபெற்ற தேர்தலில், ‘இந்தியா’ கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றது. 1 இடத்தை மட்டும் வெற்றி பெற்று பா.ஜ.க. படுதோல்வி அடைந்தது. இந்தியா கூட்டணி 22 இடங்களைக் கைப்பற்றியது. 17 இடங்களில் போட்டியிட்ட பா.ஜ.க. ஒரே ஒரு இடத்தை மட்டுமே பெற்று 16 இடங்களில் படுதோல்வியைச் சந்தித்தது. எனவேதான் மக்களை நம்பாமல் சில சதி வேலைகளைச் செய்தது பா.ஜ.க. 5 பேரை நியமன உறுப்பினர்களாக நியமித்து அவர்களுக்கு வாக்களிக்கும் தகுதியை வழங்கியது. நான்கைந்து எண்ணிக்கை தேவைப்பட்டால் இவர்களை வைத்து ஆட்சி அமைக்க நினைத்தார்கள். ஆனால் காஷ்மீரத்து மக்கள் தெளிவான முடிவை எடுத்து - குழப்பமில்லாத தீர்ப்பை வழங்கினார்கள்.

“முதல் முறையாக அரசியல் சாசனத்தின் கீழ் நடைபெறும் காஷ்மீர் சட்டசபைத் தேர்தல் வரலாற்றுச் சிறப்பு மிக்கது” என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசினார். ஆமாம்! வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவையே மக்கள் வழங்கி இருக்கிறார்கள்.

“காஷ்மீரில் இதுவரை இரண்டு கொடிகள், இரண்டு அரசியல் சாசனங்கள் இருந்தன. இப்போது ஒன்றாக ஆக்கிவிட்டோம்” என்று பெருமை அடித்துக் கொண்டார் அவர். ஒன்றாக இருந்த இந்தியாவை இரண்டாக ஆக்கத் துடிப்பவர்கள் அவர்கள் தானே தவிர, மற்றவர்கள் அல்ல.

**“காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை நமக்கு ஒரே ஒரு பிரதமர்தான்” என்றும் அமித்ஷா பேசினார். உண்மைதான். ஆனால் காஷ்மீரிலும் கன்னியாகுமரியிலும் பா.ஜ.க. தோற்றிருக்கிறது என்பதுதான் பேருண்மை ஆகும்.**

●●

## அரபிக்கடலில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவானது!

சென்னை, அக். 11 –

தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாக பல்வேறு மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக லட்சத்தீவு, கேரளா மற்றும் வட தமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழ்நாட்டில் இன்று முதல் வருகிற 14ந்தேதி வரை பெரும்பாலான இடங்களில் மிதமான மழைக்கும், கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்தது. இந்த நிலையில், தென்கிழக்கு மத்தியகிழக்கு அரபிக்கடல், அதனை ஒட்டிய லட்சத்தீவு பகுதிகளில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளது.

இந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி தொடர்ந்து வட மேற்கு நோக்கி நகர்ந்து அடுத்த மூன்று அல்லது நான்கு நாட்களில் மேலும் வலுவடைந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழை 12ம் தேதி தொடங்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்த நிலையில், காற்றழுத்த தாழ்வுப்பகுதியால் தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கான சூழல் உருவாகும் என கணிக்கப்பட்டுள்ளது.

## தாம்பரம் - திருச்சி இடையே சிறப்பு ரயில் இயக்கம்!

சென்னை , அக் 11 –

பண்டிகை கால கூட்ட நெரிசலை தவிர்க்கும் வகையில் தாம்பரம் – திருச்சி இடையே பகல் நேர இன்டர் சிட்டி சிறப்பு ரயில், இன்று (11ம் தேதி முதல் டிசம்பர் 31ம் தேதி வரை) இயக்கப்படுகிறது. சென்னையில் வசிக்கும் மக்கள் பண்டிகை மற்றும் தொடர் விடுமுறை நாட்களில், தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்வது வழக்கம்.

இதனால் பண்டிகை நாட்களில் பஸ், ரயில்களில் பயணிகள் கூட்டம் அலைமோதும். சென்னையில் வசிப்பவர்களில் பெரும்பாலானோர் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தான். இவர்கள் தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகை நாட்களை தங்கள் சொந்த ஊர்களில் கொண்டாட செல்வது வழக்கம். இந்த பண்டிகை நாட்களில் ரயில்களிலும், பஸ்களிலும் பயணிகள் கூட்டம் நிரம்பி வழியும். இந்த ஆண்டில் இந்த மாதத்தில் (அக்டோபர்) ஆயுத பூஜை மற்றும் தீபாவளி பண்டிகை வருகிறது. ஆயுத பூஜை இன்று (11ம் தேதி) கொண்டாடப்படுகிறது.

### ஒன்றிய பா.ஜ.க. அரசு பறித்த மாநிலத் தகுதியும் மாண்பும் மீட்கப்பட வேண்டும்!

# ஜம்மு - காஷ்மீர் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்றுள்ள தேசிய மாநாட்டுக் கட்சி - காங்கிரஸ் கூட்டணிக்கு வாழ்த்துகள்!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 11–

ஒன்றிய பா.ஜ.க. அரசு ஜம்மு காஷ்மீரிடமிருந்து அநியாயமாகப் பறித்த மாநிலத் தகுதியும் மாண்பும் மீட்கப்பட வேண்டும் என்றும் ஜம்மு - காஷ்மீர் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்றுள்ள தேசிய மாநாட்டுக் கட்சி - காங்கிரஸ் கூட்டணிக்கு ஜம்மு காஷ்மீர் மக்களுக்கும் வாழ்த்துகள் என்று கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.10.2024) வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:



**மாபெரும் வெற்றி பெற்றுள்ள ஜம்மு - காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சி காங்கிரஸ் கூட்டணிக்கும், ஜம்மு - காஷ்மீர் மக்களுக்கும் வாழ்த்துகள்!**

**இது இந்தியா மற்றும் மக்களாட்சிக்கான வெற்றி மட்டுமல்ல, ஒன்றிய பா.ஜ.க. அரசு ஜம்மு காஷ்மீரிடம் இருந்து அநியாயமாகப் பறித்த மாநிலத் தகுதியும் மாண்பும் மீட்டளிக்கப்பட வேண்டும் என்ற அம்மக்களின் விழைவை நிறைவேற்ற அளிக்கப்பட்ட தீர்ப்பும் ஆகும்.**

**நீதி, ஒவ்வொரு காஷ்மீரியின் நம்பிக்கையையும் மதிக்கிற அனைவரையும் அரவணைக்கிற எதிர்காலம் கொண்ட ஜம்மு காஷ்மீருக்கான தொடக்கத்தை இத்தருணம் குறிக்கிறது.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.10.2024) முகாம் அலுவலகத்தில், திரைப்பட நடிகர் ஜெயராம் தனது மனைவி பார்வதியுடன் சந்தித்து, தனது மகன் காளிதாஸ் ஜெயராம் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். திருமதி. துர்கா ஸ்டாலின் உடனுள்ளார்.

### திருப்பூர் மாவட்டத்தில் சாலை விபத்து:

# உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு தலா ரூ. 2 லட்சம் நிதி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, அக். 11 -

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம், மைவாடி கிராமம், கருப்பசாமிபுதூர் புதிய புறவழிச்சாலையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை கோட்டம், மடத்துக்குளம் வட்டம், மைவாடி கிராமம், கருப்பசாமிபுதூர் புதிய புறவழிச்சாலையில் 08.10.2024 அன்று இரவு சுமார் 11.30 மணியளவில் பழனியிலிருந்து கேரளாவை நோக்கி சென்ற சுற்றுலா வாகனமும், உடுமலைப்பேட்டையிலிருந்து பழனி நோக்கிச் சென்ற நான்குசக்கர வாகனமும் எதிர்பாராத விதமாக நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்தில் நான்கு சக்கர வாகனத்தில் பயணம் செய்த திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், இந்திரா நகரில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த திருமதி.மனோன்மணி (வயது 65), தியாகராஜன் (வயது 45), திருமதி.பிரீத்தி (வயது 40) மற்றும் சிறுவன் ஜெயப்பிரியன் (வயது 12) ஆகிய நால்வரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவரும் நாட்ராயன் (வயது 80) அவர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# ரூ.22.69 கோடி மதிப்பில் 25 புதிய தாழ்தள பேருந்துகள் இயக்கம்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

சென்னை, அக்.11-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று முன்தினம் (09.10.2024) மாநகர் போக்குவரத்துக் கழக மத்திய பணிமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுச்சூழலுக்கு இணக்கமாக பேருந்து சேவைகளை நவீனமயமாக்கும் திட்டத்தின் வாயிலாக மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு 22.69 கோடி ரூபாய் மதிப்பிலான 25 புதிய BSVI தாழ்தள பேருந்துகளின் இயக்கத்தை, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய 352 தாழ்தள பேருந்துகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பல கட்டமாக இதுநாள் வரை 170.60 கோடி ரூபாய் மதிப்பிலான 188 தாழ்தள பேருந்துகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், மேலும் தற்பொழுது 25 புதிய BSVI தாழ்தள பேருந்துகள் நேற்று முன்தினம் (09.10.2024) முதல் இயக்கப்பட்டுள்ளது. புதிய பேருந்துகளில் மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் எளிதாக ஏறிச் செல்லும் வகையில் சிறந்த தொழில்நுட்ப அம்சங்கள் உள்ளன.

இந்நிகழ்வில், போக்குவரத்துத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், ஜெர்மன் குடியரசின் துணை தூதரகத்தின் பொது துணை தூதர் மிச்செல குச்லர் (Michaela Kuchler), ஜெர்மன் வங்கியின் இந்திய நாட்டிற்கான இயக்குநர் உல்ஃப் முத் (Wolf Muth), முதுநிலை போக்குவரத்து நிபுணர் சுவாதி கண்ணா, மாநகர் போக்குவரத்துக் கழக இணை மேலாண் இயக்குநர் செ.நடராஜன், சாலை போக்குவரத்து நிறுவன இயக்குநர் சு.ரங்கநாதன், தமிழ்நாடு போக்குவரத்து நிதி கழக இணை மேலாண் இயக்குநர் வெ.வெங்கட்ராஜன், உயர் அலுவலர்கள், தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (09.10.2024) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு டாடா நிர்வாகம் சார்பில் ரூ.2 கோடிக்கான காசோலை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, Tata Power Renewable Energy President தீபேஷ் நந்தா மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.